பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஜப்பசி 06 | திங்கட்கிழமை | 23.10.2023 | அதிர்வு 83 |
|---|---|---|---|---|---|

## அமைச்சரவையில் இன்று சிறு மாற்றம்

அமைச்சரவையில் இன்று மாற்றம் இடம் பெறவுள்ளது என்று அறியமுடிகின்றது.

சுகாதார அமைச்சு மற்றும் கைத் தொழில் அமைச்சுகளில் மாற்றம் இடம் பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரேல் - ஹமாஸ் சண்டையில் பலஸ்தீன மக்கள் பலிக்கடாவாக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## அமைதியை நிலைநாட்ட ஐ.நா. முன்னெடுக்கும் பணிக்கு இலங்கை முழு ஆதரவு வழங்கும் என்கிறார் ஜனாதிபதி



அனைத்து மதத்தினரையும் சமமாக நடத்துவதும், ஒவ்வொரு பிரஜைக்கும் சம உரிமை வழங்குவதும் தற்போதைய அரசின் கொள்கையாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் பலஸ்தீன மக்கள் பலிக்கடாவாக்கப்படுவதைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், அந்தப் பிரதேசங்களில் மோதல்களைத் தடுத்து அமைதியை நிலைநாட்ட

02▶

# ரவிராஜைக் கொலை செய்தவர் யார்? ஆதாரங்கள் விரைவில் அம்பலமாகும்

## யாழில் வைத்து மனோ தெரிவிப்பு



- எஸ்.நிதர்ஷன் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னநாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜைக் கொலை செய்தது யார் என்பதும், கொலைக்கு உத்தரவிட்டது யார் என்பதும் சம்பந்தமாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

02▶



# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள்!

- மன்னார் நிருபர் -

தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையில் உள்ள பாக்கு நீரிணையை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்கள். (விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)





# ‘லியோ’ படம் பார்க்கச் சென்ற இளைஞர் குழுவினர் மோதல்

## வாள்வெட்டில் ஐவர் படுகாயம்



– மட்டக்களப்பு நிருபர்கள் –

மட்டக்களப்பு – செங்கலடி திரையரங்கில் நேற்று வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விஜய் நடித்து வெளியான லியோ படம் பார்க்கச் சென்ற இளைஞர்களுக்கிடையில் இந்தச் சம்பவம்

02▶




உலகம் மாறிகொண்டிருக்கின்றது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அபரிமிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்திலும் அதன் மாற்றங்களைக் கண்டு வியந்து கொண்டிருக்கிறோம்.

உலக நாடுகளில் தேர்தல் பிரசாரங்கள், தேர்தல் முறைமைகள் போன்றவை கூட விஞ்ஞான யுகத்துக்கேற்ப மாறி வருகின்றன.

02▶

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுக்கூட்டங்கள், பிட் நோட்டீஸ்கள், சுவரொட்டிகள் என்றிருந்த பிரசாரப் பாணிகளில் இப்போது சமூக ஊடகங்கள் அதிக தாக்கம் செலுத்தத் தொடங்கி விட்டன.

இந்தியாவில் வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை எல்லாம் கணனி மயப்படுத்தப்பட்டு விட்டன. இலங்கையில் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மட்டும்தான் கணனி யுகம் வரை முன்னேறி இருக்கிறது. மேற்கு நாடுகளில் வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்காளர்கள் வராமலேயே தமது வாக்குகளைச் செலுத்தும் முறைமை கூட வந்துவிட்டது. அமெரிக்காவில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அப்படி மின்னஞ்சலில் அளிக்கப்பட்ட வாக்குகளே ஜோ பைடனை வெற்றி வேட்பாளராக்கின என்பது கவனிக்கத்தக்கது.

நவீன கணனி யுகத்திற்கு ஏற்ப ஊடகப் போக்குகளே மாறிவிட்டன. அச்சு வடிவத்தில் வரும் பத்திரிகைகள் கூட இன்று டிஜிட்டல் தளத்திலும் பவனி வரவேண்டிய கட்டாயமாகிவிட்டது.

இலங்கையில் பின்னடைவில் மூழ்கி, இனி மீளாது என்று படுத்துவிட்ட தமது ஐக்கிய தேசியக் கட்சிக்கு புதிய உயிரூட்டும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டிஜிட்டல் மேடை பற்றி அதிகம் பேசுகின்றார். தமது கட்சியை நவீன விஞ்ஞான வளர்ச்சி முறையில் வளர்த்தெடுப்பது பற்றி பிரஸ்தாபிக்கின்றார்.

எங்கள் தமிழ் கட்சிகள் 75 வருடத்திற்கு முந்திய கட்சி கட்டமைப்புகளைப் பற்றித்தான் சிந்தித்து கொண்டிருக்கின்றன. மூலக் கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை என்று கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் வடிவமைக்கப்பட்ட முறைமையைப் பற்றி நின்றபடி, அதை நவீனப்படுத்துதல் என்ற குறுகிய வட்டத்துக்குள்தான் நமது சிந்தனை இருக்கின்றது.

ஆனால், நேற்று முன்தினம் தனது ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் கட்சி மீளமைப்புப் பற்றி பேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அதை விஞ்ஞான வளர்ச்சிக்குரிய முறைமையில் அணுகுவது குறித்து விவரித்திருக்கின்றார்.

“ஐக்கிய தேசியக் கட்சி டிஜிட்டல் குழுக்களை கட்சிக்குள் அனுமதிப்பதன் மூலம் ‘டிஜிட்டல் அரசியல் கட்சி’யாக மாறுகின்றது. கட்சியில் எந்த உறுப்பினரும் கட்சியின் முன் அனுமதியுடன் டிஜிட்டல் குழுக்களை உருவாக்கலாம். அந்த டிஜிட்டல் குழுக்கள் தொகுதி ரீதியாக, மாவட்ட ரீதியாக, தேசிய ரீதியாக உருவாக்கப்பட முடியும்” – என்று கட்சித் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார்.

கட்சியின் தொகுதி, மாவட்ட, தேசியக் கிளைகள் டிஜிட்டல் தளத்திலும் உருவாக்கப்படலாம் என்பதற்கான அறிவிப்புத்தான் இது. இந்த நவீன தொடர்பாடல் முறைத் தளத்துக்குள் நமது தமிழ்க் கட்சிகள் நுழையுமா? எப்போது?

# ‘லியோ’ படம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது.

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறி அது வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் 5 இளைஞர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 4 பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஒருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ரவிராஜைக் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் முன்னாள் செயலாளர் என்று சொல்லக் கூடிய ஆஸாத் மௌலானா உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மட்டுமல்லாமல் பல்வேறு விடயங்களைப் பகிரங்கமாக கூறியுள்ளார்.

அதில் அவர் கூறிய விடயங்கள் சம்பந்தமாக சனல் 4 காணொலி ஒன்றையும் வெளியிட்டுள்ளது. ஆனால், அது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விடயங்களுடன் வரையறுக்கப்பட்டிருந்தது.

இந்த உயிர்த்த ஞாயிறு திப் படுகொலை என்பது 2019 ஆம் ஆண்டு இடம்பெற்றது. ஆனால், கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் பல்வேறு கருத்துக்களையும் ஆஸாத் மௌலானா கூறியிருக்கின்றார்.

அந்தக் கருத்துக்கள் மூன்றாவது நபர் மூலமாக எனக்கும் வந்து சேர்ந்திருக்கின்றது. எனினும், அது சம்பந்தமான முழுமையான தகவல்கள் வரும் வரையில் பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆனாலும், எனக்கு வந்திருக்கும் தகவலிலே நண்பர் ரவிராஜை கொலை செய்தது யார், கொலைக்கு உத்தரவிட்டது யார், அதிலும் முதல் உத்தரவு கடைசி உத்தரவு என இந்த உத்தரவுகளை பிறப்பித்தது யார் என்பது சம்பந்தமாக எல்லாம் சொல்லியிருக்கின்றார்.

ஆனாலும் இந்த விடயங்கள் தொடர்பில் முழுமையான தகவல்கள் வரும் வரையில் பொறுத்திருக்கின்றேன். அனைத்தும் வந்த பின்னர் முழுமையாக வெளிப்படுத்தத் தயாராகவுள்ளேன். இதுதான் உண்மை.” – என்றார்.

# இஸ்ரேல் - ஹமாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. பொதுச்செயலாளர் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவை இலங்கை வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் முசலி தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறினார்.

சமய கலாசார அலுவல்கள் அமைச்சும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, முஸ்லிம் சமய மற்றும் கலாசார முறைப்படி மாணவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

தேசிய மீலாதுன் நபி விழாவின் சிறப்புரை அஷ்ஷெய்க் பி. நிஹ்மத்துல்லாஹ் மௌலவியால் ஆற்றப்பட்டது.

தேசிய மீலாதுன் நபி விழா 2023 இற்கான நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையும் வெளியிடப்பட்டதுடன், தபால் மா அதிபர் ருவன் சத்குமாரவினால் ஜனாதிபதிக்கு முதல் முத்திரை மற்றும் முதல் நாள் அட்டை வழங்கப்பட்டது.

தேசிய மீலாதுன் நபி விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட விசேட நினைவுச் சின்னமும், “மன்னார் மாவட்ட வரலாறு” நூலும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

நபிநாயகத்தின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைத்தார்.

மேலும் மன்னார் மாவட்ட பள்ளிவாசல்களில் நீண்டகாலம் பணியாற்றிய மௌலவிமார்களுக்குக் கௌரவ விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டதுடன், பிரதேசத்துக்கு அளப்பரிய சேவையாற்றிய பேராசிரியர் மர்ஹூம் ஹஸ்புல்லாஹ்ஹுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

புத்தளம் பள்ளிவாசல் சம்மேளனத்தின் தலைவருக்கும் புத்தளம் மாவட்ட ஜம்இயதுல் உலமா அமைப்பின் தலைவருக்கும் நினைவு பரிசுகள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது,

“இன்று நாம் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். மன்னார் மாவட்டத்தில் நான் கலந்துகொண்ட இரண்டாவது சமய விழா இதுவாகும். சில மாதங்களுக்கு முன்னர் மடு தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டோம். இந்த நிகழ்வை பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்தமைக்காக சமய கலாசார அலுவல்கள் அமைச்சுக்கும் முஸ்லிம் சமய கலாசார

(3ஆம் பக்கம் பார்க்க...)



# இஸ்ரேல் - ஹமாஸ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி..)

அலுவல்கள் திணைக்களத்துக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிகழ்வுடன் இங்கு புதிய பாடசாலை கட்டடத் திறப்பு, வீட்டுத்திட்டம் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்துக்கு இந்த அபிவிருத்தி தேவை. இந்தப் பகுதி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதி. எனவே, இந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் வீதிகள் அமைப்பது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம். அமைச்சர் நாடாளுமன்றத்திலும் அதை ஞாபகப்படுத்துகின்றார். குறிப்பாக இப்பிரதேசத்தில் வீடுகளை நிர்மாணிப்பது போன்று கல்வியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மன்னார் நகரில் கல்வி சிறப்பாக உள்ளது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கல்வி நிலை குறித்து திருப்தி அடைய முடியாது.



அத்துடன், இப்பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தித் திட்டத்தையும் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காங்கேசந்துறையில் ஆரம்பித்தோம். அடுத்து தலைமன்னாரில் ஆரம்பிக்கப்படும். அதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்த மின்சாரக் கட்டமைப்பை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன. அது இந்த மன்னார் ஊடாகவும் இடம்பெறுகின்றது என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இது வெறும் ஆரம்பம் தான். இதன் மூலம் எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். குறிப்பாக இந்த பகுதியில் பசுமை பொருளாதாரம் மற்றும் பசுமை வலுசக்தி ஆற்றல் அதிக சாத்தியம் உள்ளது. இங்கு கிடைக்கும் சூரிய சக்தியை கொண்டு இப்பகுதியை மேம்படுத்த முடியும். புத்தளத்திலிருந்து மன்னார் வரை யாழ். குடாநாட்டின் ஊடாக முல்லைத்தீவு வரை அந்த வாய்ப்பு உள்ளது. இதன் மையமாக பூனரின் நகரை உருவாக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.



மேலும் மன்னாரை சுற்றுலா மையமாக மாற்ற நாங்கள் விரும்புகின்றோம். அதேநேரம் மீன்பிடி தொழில் வளர்ச்சியடையும் போது மன்னாரும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையும்.

இன்று நாம் இங்கு நபி நாயகத்தை நினைவு கூர்வோம். நபிகள் நாயகம் அவர்கள் கூறிய அதே கோட்பாடுதான் இன்று இலங்கையில் உள்ளது. எனவே இந்த விழாவை தேசிய விழாவாகக் கருதுகின்றோம்.



அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை. மேலும் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே எங்கள் நோக்கம். இங்குள்ள முஸ்லிம் மக்களுக்கு சில பிரச்சினைகள் உள்ளன. அரசும் அவற்றைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதை இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நான் வங்குரோத்தான நாட்டையே பொறுப்பேற்றேன். அந்த வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் மீண்டு வருகிறோம். எனவே, அந்த பணியை முறையாக மேற்கொள்ளவுள்ளோம்.

இன்றைக்கு மொராக்கோ முதல் இந்தோனேஷியா வரை ஆபிரிக்கா, ஐரோப்பா என எல்லா இடங்களிலும் நபிகளாரின் இஸ்லாமியக் கோட்பாடு பரவியுள்ளது. நபிகளார் இந்தக் கோட்பாட்டைப் பிரசாரம் செய்தபோது, எல்லா கிறிஸ்தவ யூதர்களும் அந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள். எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் இன்று பெரிய பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக, பலஸ்தீன விவகாரம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. அதற்கு முன்னதாகவே அரசு தனது கருத்தைத் தெரிவித்திருந்தது. நாடாளுமன்றத்திலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. 20 உணவு லொறிகள் காஸாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டோம். ஆனால், இது போதுமா என்ற கேள்வி எழுகிறது.



இஸ்ரேல் – ஹமாஸ் போர் காரணமாக பலஸ்தீன மக்கள் காஸா பகுதியில் சிக்கித் தவிக்கின்றனர். அந்த மக்களின் துயரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அந்த மக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். உணவு எகிப்திலிருந்து வழங்கப்படுகின்றது. இஸ்ரேல் பகுதியில் இருந்தும் உணவு வழங்கப்பட வேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும்.

இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் ஒரு பிரச்சினை. ஆனால், இந்தப் போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. எனவே, அதனைத் தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. மற்ற நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. குறிப்பாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். பலஸ்தீன நாடு ஒன்று உருவாக வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.” – என்றார்.

இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு அபிவிருத்திக் குழுவின் தலைவருமான காதர் மஸ்தான்,

“தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மன்னாருக்கு விஜயம் செய்தமை எமது மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகவே கருதுகின்றோம். யுத்தம் நிறைவடைந்த பின்னர் இப்பிரதேசம் அபிவிருத்தி அடையவில்லை.முறையான திட்டமிடல் இன்றி மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளால் குறித்த பிரதேசத்தில் அபிவிருத்தி மற்றும் முதலீடுகளுக்காக காணிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



உங்கள் தலைமையில் எனது மாவட்ட மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும் என்பதை குறிப்பிட வேண்டும். எந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததோ, அந்த நாட்டின் பொறுப்பை ஏற்று பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உழைத்தீர்கள். மக்களின் அவலங்களை அறிந்த ஜனாதிபதி என்ற வகையில் இப்பிரதேசங்களில் மீள்குடியேற்றப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவீர்கள் என நம்புகின்றோம்.” – என்றார்.

சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர் கே. திலீபன், பௌத்த சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.எம். பைசல், மகா சங்கத்தினர் தலைமையிலான சமயத் தலைவர்கள், தூதுவர்கள், பாதுகாப்புப் படைப் பிரதானிகள், பாடசாலை மாணவர்கள், பிரதேசவாசிகள் மற்றும் பெருந்திரளான மக்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள்!




– மன்னார் நிருபர் –

தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையில் உள்ள பாக்கு நீரிணையை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் தனுஷ்கோடி கரைக்குச் சென்ற நீச்சல் குழுவினர் நேற்றுக் காலை 3 மணியளவில் கடலில் குதித்து நீச்சல் நிகழ்வை ஆரம்பித்தனர். நேற்று மதியம் ஒரு மணியளவில் தலைமன்னார் கரையை அவர்கள் வந்தடைந்தனர் .

இந்தச் சாதனை மாணவர்களை மன்னார் ரோட்டரிக் கழக உறுப்பினர்கள் உட்படப் பல கல்வியாளர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி சாரணர்களின் 150 வருட நிறைவு தினத்தை முன்னிட்டு இந்தச் சாதனை நிகழ்வு நடத்தப்பட்டது.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும், 15 வயதுக்குட்பட்ட ஒரு மாணவரும் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்தார்கள்.

இவர்களுக்கான சான்றிதழ்களை சோழன் ஆசிய சாதனை அமைப்பு வழங்கியது.










# உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் நாடாளுமன்றில் மு.கா.தலைவர் ஹக்கீம் பரபரப்புக் குற்றச்சாட்டு

சிலர் அரசியல் நோக்கம் ஒன்றை அடைந்து கொள்வதற்காக, இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருந்துள்ளது என்ற திடுக்கிடும் தகவலை கத்தோலிக்கப் பேராயரையும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த பிரஸ்தாப குண்டுத் தாக்குதல் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையையும் ஆதாரம் காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பலஸ்தீன யுத்த நிலைமையை தொடர்பான ஒத்தி வைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முந்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொழுது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் .

அங்கு உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இந்நாட்டின் கத்தோலிக்க சமயத் தலைவரான பேராயரை நாங்கள் சென்று சந்தித்தோம். அமைச்சர்களான பௌஸி, கபீர் காசிம், ரிஷாத் பதியுத்தீன் ஆகியோரும் என்னுடன் வந்திருந்தனர். அப்பொழுது நாங்கள் எங்களது கவலையை தெரிவித்த பொழுது பேராயர், "ஏன் நீங்கள் இதற்காக கவலைப்படுகிறீர்கள்? இதற்கு இந்நாட்டு முஸ்லிம்கள் பொறுப்பல்ல" எனக் கூறிவிட்டு, இது மத்திய கிழக்கு நாடொன்றின் வேலை என்றும்,இஸ்ரேல் இதன் பின்னணியில் இருந்துள்ளதாக சந்தேகிப்பதாகவும் கூறினார்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் மீது அப்பொழுது தாக்குதல் மேற்கொள்ளப்படாமல் தடுத்ததற்காக நாங்கள் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்றைய(20 ஆம் திகதி) டெய்லி நியூஸ் பத்திரிகையில் "காஸா யுத்தம் இஸ்ரவேல் - பலஸ்தீன் மோதல்" என்ற தலைப்பில் பேராசிரியர் எனக் கூறிக்கொள்ளும் ரொஹான் குணரட்ன என்பவர் ஒரு கட்டுரையை எழுதியுள்ளார். அதன் தலைப்பு அவ்வாறு பொதுவாக இருந்த போதிலும், அதன் உள்ளடக்கம் நடுநிலையானதாக இல்லை. அவர் பேராசிரியர் என்று கூறிக் கொள்வது தொடர்பில் நாடாளுமன்றக் குழு அறை ஒன்றில் நான் அவருடன் நேரடியாகவே முரண்பட்டுள்ளேன். அது வேறு விஷயம். முன்னர் ஒருபோது அவர் சஹ்ரானை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி எங்களுக்கு புத்திமதி சொல்ல வந்தார். அவருடைய கட்டுரையில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. அவர் ஒரு பக்க சார்பாகவே நடந்து கொள்கிறார். இதற்கு ஐ.எஸ் தான் பொறுப்பு என்ற அவரது தவறான நிலைப்பாட்டை நிரூபிப்பதற்காக அவர் அபாண்டங்களைக் கூறி வருகிறார்.

ரொஹான் குணரட்ன அவரது கட்டுரையில் இஸ்ரேலின் மொஸாட் உளவுத் துறை, நிபுணத்துவம், அதன் பரந்துபட்ட



வலையமைப்பு என்பன பற்றியெல்லாம் சிலாகித்து எழுதியுள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடந்த குண்டுத்வதாக்கல் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணை குழுவின் அறிக்கை இதோ இருக்கிறது. நீதியரசர் ஜனக் டீ சில்வா தலைமையிலான அந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் அதன் 106ஆம் பக்கத்தில் காணப்படுவதாவது:-



சஹ்ரான் ஐ.எஸ். ஆதரவாளர்கள் பற்றி விழிப்பாக இருந்ததாகத் தோன்றுகிறது. ஆனால், அவர்கள் வேறு உளவாளிகள். 2018 அக்டோபர் 10ஆம் திகதி சஹ்ரான் தனது முகநூல் பக்கத்தில் ஒரு கடிதத்தைப் பதிவிட்டு இருந்தார் அதில் பக்கம் பின் அபூ என்பவர் பற்றி இருந்தது. அவர் ஒரு நாட்டின் உளவுத் துறையின் முகவர் என்கிறார். அவர் இவர்களைப் பற்றி அந்த வெளிநாட்டு உளவுத்துறைக்குத் தகவல்களை வழங்கி வந்ததார் எனக் கூறுகிறார் .

அதற்குப் பதிலாக, 11. 10 .2018 அன்று, பக்கம் பின் அபூ என்பவர், சஹ்ரான் இஸ்ரேல் உளவுத்துறையின் முகவர் என்பதை குறிப்பிட்டிருக்கிறார்.

சஹ்ரான் இஸ்ரேலினால் வாங்கப்பட்ட முகவராக (ஏஜென்ட்) இருந்து, இங்கு செயற்பட்டிருக்கின்றார்.

பேராயர் எங்களிடம் தெரிவித்த சந்தேகமும் அதனையே உறுதிப்படுத்துகின்றது.

அமைச்சர் சரத் வீரசேகர இன்று(20) காலையில் இங்கு பேசும் பொழுது, இஸ்ரேல் இலங்கை அரச படைகளுக்கு அதிகமான உதவிகளைச் செய்துள்ளதாக சிலாகித்துக் கூறியுள்ளார். இஸ்ரவேல் இலங்கை அரச படையினருக்கு 1980 களின் நடுப்பகுதியில் யுத்தப் பயிற்சி அளித்த அதே வேளையில், அதற்குச் சமாந்தரமாக தமிழ்ப் போராளிகளுக்கும் பயிற்சி அளித்தது பற்றி இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும். இதனை பேராயரும் நாங்கள் அவரைச் சந்தித்தபோது உறுதிப்படுத்தினார்.

பலஸ்தீனத்தில், காசாவில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு வைத்தியசாலை மீது பாரிய தாக்குதல் நடத்தி, படுகொலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அமெரிக்க ஜனாதிபதி டெல் அவீவிற்குச் சென்று பிரதமர் நெடென்யாஹுவை ஆரத் தழுவி உற்சாகப்படுத்தியதும், மறுநாளே பிரித்தானியப் பிரதமரும் அங்கு சென்று இஸ்ரேலிய பிரதமரை சந்தித்து அரவணைத்து ஊக்குவித்ததும் விசனம் அளிக்கின்றன.

பாலஸ்தீனத்தில் நடைபெறுகின்ற யுத்தம் பாரிய அளவிலான பேரவலங்களை ஏற்படுத்தி வருகிறது. கைப்பற்றப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை முற்றிலும் மீறி, இஸ்ரேலிய அரசாங்கம் யுத்தக் குற்றங்களையும் இனச் சுத்திகரிப்பையும் மேற்கொண்டு வருகிறது. அதற்கு மேற்குலகும் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறது. அதனை இதே வேளையில் அவ்வாறான நாடுகள் உட்பட உலகெங்கும் அதனை கண்டித்து மக்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

பாலஸ்தீன மக்கள் அனுபவித்து வரும் அவலங்களை உலகம் கவனிக்க வேண்டிய நேரம் இது. உலகம் இனி மேலும் பலஸ்தீன மக்களை வேறுபடுத்திப் பார்க்க கூடாது. ஆயிரக்கணக்கான சிசுக்களும் குழந்தைகளும் சிறுவர்களும் பெண்களும் முதியவர்களும் இஸ்ரேலினால் கோரமாகக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். வெள்ளை பொஸ்பரஸ் இரசாயனத் துகள்கள் அடங்கிய குண்டுகள் உட்பட, குண்டு மாரி அவர்கள் மீது பொழியப்படுகின்றது. வைத்தியசாலைகளும், பள்ளிவாசல்களும், பாடசாலைகளும் தரைமட்டமாக்கப்படுகின்றன. மின்சாரம், நீர் விநியோகம் போன்றவை துண்டிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாகவே காஸா முதலான பலஸ்தீன பிரதேசங்களில் மக்கள் "திறந்த வெளி சிறைச் சாலை"யில் வாழ்வதாகவே கருத வேண்டி இருக்கிறது. - என்றார்.

# வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் பாதிப்பு; ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவாராம் மஹிந்த

நாட்டு மக்கள் பொருளாதார பாதிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய நெருக்கடிகளினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியுடன் எதிர் வரும் வாரம் இடம்பெறவுள்ள பேச்சின் போது விசேட கவனம் செலுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி - பெல்மடுல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மத வழிபாட்டின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில் -

பொருளாதாரப் பாதிப்பு மற்றும் வாழ்க்கை செலவு அதிகரிப்பால் ஒட்டு மொத்த மக்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். 2024 ஆம் ஆண்டுவரவு-செலவுத்திட்டம்மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும்.

மக்கள் தற்பொழுது எதிர்கொண்டுள்ள இந்த அவல நிலையை மாற்றியமைக்க வேண்டும். ஜனாதிபதியுடன் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள பேச்சின் போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் முக்கிய அரசியல் தீர்மானங்கள் அடுத்த மாதம்



வெளியிடப்படும். தேர்தலுக்கு நாங்கள் தயாராக உள்ளோம். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் கட்சிக்குள் எவ்வித முரண்பாடும் கிடையாது. நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் வேட்பாளரை உரிய நேரத்தில் களமிறக்குவோம். - என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலில் உயிரிழந்த இலங்கை மாதுவை அடையாளம் காண மரபணுப் பரிசோதனை



இஸ்ரேலில் இடம்பெற்ற மோதல்களின்போது உயிரிழந்த அனுலா ரத்நாயக்கவின் சடலத்தை அடையாளம்காண மரபணுப் பரிசோதனையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அதற்காக அவரது இரண்டு பிள்ளைகள் மற்றும் அவரது சகோதரியின் டி.என்.ஏ. மாதிரிகள் பரிசோதிக்கப்பட உள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, அவர்களின் டி.என்.ஏ. மாதிரிகளை இஸ்ரேலுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல் போயிருந்த இலங்கையை சேர்ந்த அனுலா ரத்நாயக்க உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் கடந்த 17ஆம் திகதி உறுதிப்படுத்தியிருந்தனர்.

கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல்போன அனுலா ரத்நாயக்க, குறித்த தாக்குதலின்போது உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உரிய பணிகள் நிறைவடைந்தவுடன் உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு உடல் அனுப்பி வைக்கப்படும் என தூதரகம் தெரிவித்துள்ளது.

# பிரித்தானியாவிற்கான தூதுவராக போகொல்லாகம பதவியேற்பார்?

பிரித்தானியாவிற்கான இலங்கையின் அடுத்த உயர்ஸ்தானிகராக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரை ஏற்றுக்கொள்வதில் பிரித்தானிய அரசாங்கம், நீண்டகால தாமதத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையிலேயே தற்போது அதற்கான ஒப்புதல் கிடைத்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த அமைச்சராக இருந்த அவர் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசிலும் இணைந்தார். கிழக்கு மாகாண ஆளுநராகவும் பணியாற்றினார்.

இந்த நிலையில், பிரித்தானிய உயர்ஸ்தானிகராக அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் நடுப்பகுதியில் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் - ராஜபக்ஷ; பதில் என்ன?

நாட்டு மக்கள் பொருளாதாரப் பாதிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகிய நெருக்கடிகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். இது குறித்துத் தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசவிருக்கின்றார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அரசியல்வாதிகளும், ஊடகத் தரப்பினரும் தேர்தல்கள், ஜனநாயக ஆட்சி போன்றவை பற்றி எல்லாம் அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவை பேசப்பட்ட வேண்டிய விடயங்கள்தாம். மறுக்கப்பட முடியாத விவகாரங்கள்தாம்.

ஆனால், அவற்றை எல்லாம் தாண்டி மக்களுக்கு உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகள் பல இருக்கின்றன. உயிர் வாழ்வுக்கு அடிப்படையான விடயங்கள் அவை. அந்த தேவைகளை நிறைவு செய்வதுதான் அவர்களுக்குப் பிரதானமானது. மிகப் பிரதானமானது. இந்த நாட்டின் பல லட்சக்கணக்கான வாய்களினதும், வயிறுகளினதும் வாழ்நிலை தவிப்பாகக் காத்திருக்கும் அந்த தேவையுணர்வு முதலில் நிறைவு செய்யப்பட வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ மட்டுமல்லர், நமது அரசியல் தலைவர்கள் எல்லோரினதும் முதல் பேசுபொருளாக இருக்க வேண்டியது நாட்டு மக்களின் அந்த பிரதான - அடிப்படை - தேவைகளை நிறைவு செய்யும் மார்க்கம்தான்.

ஏற்கனவே நாடு பொருளாதார வீழ்ச்சியினால் துவண்டு கிடக்கின்றது. அதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்தி நிற்கும் இலங்கை அரசு, அந்த நிதியம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அமைய ஒழுக வேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

வரி கட்டணங்கள் உயர்வு, மானியங்கள் வெட்டு, நிவாரணங்கள் நிறுத்தம், விலைவாசிகள் அதிகரிப்பு என்று நாணய நிதியம் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு - அதன் இசைக்கு ஏற்ப - ஒழுகி, நடனம் ஆட வேண்டிய அரசு, அதனால் நாட்டின் பாமர மக்கள் மீது அதே சுமையை இன்னும் அதிகமாகச் சுமத்தப் போகின்றது.

போதாக்குறைக்கு ரஷ்ய - உக்ரைன் போரால் சீர்கெட்டிருந்த சர்வதேச பொருளாதாரக் கட்டமைப்பு இப்போது திடீரென்று வெடித்த இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தத்தால் மேலும் மோசமான கட்டத்தை எட்டி இருக்கின்றது. அது பலதரப்புப் போராக மாறக்கூடிய ஏது நிலைகள் உண்டு. அப்படி மாறினால், அதனால் உலகப் பொருளாதார ஒழுங்கமைப்பில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பின்னடைவுக்குள் தள்ளும். நம் நாட்டில் துவண்டு கிடக்கும் நம் மக்கள் மீளவே முடியாத பொருளாதார நெருக்குவாரத்தில் நிரந்தரமாக ஆழ்த்தப்படும் பேராபத்தும் உள்ளது.

நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தாலும், இந்த ஆட்சிப் பீடத்தை ரணில் - ராஜபக்ஷ அரசு என்றே எல்லோரும் கூறுகின்றனர்.

மக்கள் இன்று எதிர்கொள்ளும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குப் பதில் கூற வேண்டிய - தீர்வு காண வேண்டிய - பிரதான தலைவர்கள் இன்று அவர்கள் இருவரும்தான். இருவரும் சந்தித்துப் பேசி என்ன கூற போகின்றார்கள் என்பதை நாடு பார்த்திருக்கிறது.

# தமிழரின் அழிவும் அனுபவமும் உலகுக்கே பாடமாக அமைந்தது

## அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு



"எமது உரிமைப் போராட்ட அனுபவங்களும் அழிவு யுத்த முடிவுகளும் சகல மக்களுக்கும் பாடமாக அமைந்து விட்டது. சமாதானப் பேச்சுக்கான கதவுகளை இறுக மூடிவிட்டு ஆயுதங்களால் எதையும் அடைந்துவிட முடியும் என்ற அதீத நம்பிக்கையின் விளைவுகளே அந்தப் படிப்பினைகள்."

– இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாலஸ்தீன – இஸ்ரேல் விவகாரம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"எமது முன்னோர்கள் காத்துவந்த மரத்தின் விதைகளை நான் மறவாது காத்திருக்கின்றேன். இந்த விதைகளையே எனது தாயக்கத்தில் மீண்டும் விதைப்பேன். எழுபது ஆண்டுகள் ஆக்கிரமிப்பிற்கும் அவலங்களுக்கும் மத்தியில் பாலஸ்தீன மண்ணில் இருந்து எழும் நம்பிக்கையின் குரல் இது.

இஸ்ரேல் படையினருக்கும் கமாஸ் இயக்கத்துக்கும் இடையிலான மோதல் குறித்தும் மக்களின் அவலங்கள் குறித்தும் எனது கருத்துக்களை வழங்கியமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

1914ஆம் ஆண்டு வரையில் ஓட்டோமோன் பேரரசின் கீழிருந்த இப் பகுதி, முதலாம் உலகப் போரில் பேரரசு வீழ்ச்சி காண, பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டு, 1948ஆம் ஆண்டு வரை அதன் ஆட்சி நீடித்தது.

பிரித்தானியர் தமது ஆட்சிப் பகுதியை விட்டு வெளியேறிய சமயத்தில், இப்பகுதியை இரண்டாகப் பிரித்து, பாலஸ்தீன அராபியர்களுக்கென ஒரு நாடும், யூதர்களுக்கு ஒரு நாடும் தோற்றுவிப்பதற்கும், ஜெரூஸலம் நகரத்தை சர்வதேச நகரமாக மாற்றவும் ஐக்கிய நாடுகள் சபை தனது ஆதரவைத் தெரிவித்திருந்தது.

இதனை யூதத் தலைவரகள் ஏற்றுக் கொண்டனர். ஆனால், அரபிய தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அன்றிலிருந்து இந்த யுத்தம் இன்று வரையில் விட்டு, விட்டு தொடர்ந்து கொண்டெயிருக்கிறது. தற்போது நடந்து கொண்டிருக்கின்ற இந்த மோதலானது இரு தரப்பிலும் ஆயிரக் கணக்கான பொது மக்களை காவு கொண்டிருக்கின்றது. பலரை அங்கவீனமாக்கியுள்ளது. பல வள அழிவுகளைத் தந்து கொண்டிருக்கின்றது. நீடித்த காலமாக பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இதுவரையில் சுமூகமான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

இருதரப்பினரும் சமாதானத்துக்கு வரவேண்டுமானால் சில விடயங்கள் குறித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டும். ஒன்று, பிற நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள பாலஸ்தீனிய அகதிகளின் நிலை பற்றியது. இவர்களுக்கான வழி என்ன? என்பது தொடர்பில் இருதரப்பினரும் இதுவரை எந்தவிதமான தீர்வுகளுக்கும் வரவில்லை. எனவே, இவ்விடயம் தொடர்பில் தீர்வு எட்டப்பட வேண்டியுள்ளது.

இரண்டாவது, மேற்கு கரையில் இஸ்ரேலினால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக்கள் தொடர்பான விடயம். சர்வதேச விதிகளின்படி இந்தக் குடியிருப்புக்கள் சட்டவிரோதமானவை என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இதனை இஸ்ரேல் மறுத்துள்ளது. எனவே, இந்தக் குடியிருப்புக்கள் அகற்றப்பட வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்வு எட்டப்பட வேண்டும்.

மூன்றாவது, ஜெருசலேம் நகரை இரண்டு தரப்பினரும் பகிர்ந்து கொள்வதா? இல்லையா? என்பது குறித்து இரண்டு தரப்பினரும் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். நான்கா

(8ஆம் பக்கம் பார்க்க...)

# பிரசன்ன ரணதுங்க, சரத் வீரசேகர இருவருக்கும் அமெ. விசா மறுப்பு

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோருக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் துறை கண்காணிப்புக் குழுவின் தலைவர்களின் செயலமர்வில் பங்கேற்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் பரிந்துரைத்தவர்களில் இந்த இருவரின் பெயர்களும் அடங்கியிருந்தன.

எனினும், விசா நிராகரிக்கப்பட்டதை யடுத்து அவர்களும் இருவரும் அமெரிக்க பயணத்தை இரத்து செய்துள்ளனர் எனக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு எதிரான வழக்குக் காரணமாகவும், யுத்த காலத்தில் சரத் வீரசேகரவின் செயற்பாடுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுகள் காரணமாகவும் இருவரது விசாக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விஜயத்திற்கான குழுத் தலைவராக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவே நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, சுற்றாடல் துறை கண்காணிப்புக் குழுவின் தலைவரான அஜித் மன்னப்பெருமவுக்கு ஒரு மாதகாலம் நாடாளுமன்ற சேவை தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவர் இந்த விஜயத்தையும் தவறவிடுவார் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராகவும் அமெரிக்கா தடைகளை விதித்துள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கருத்துத் வெளியிடுகையில் –

தாம் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு பல வருடங்களாக அமெரிக்க அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

எரிசக்தி அமைச்சராக பதவி வகித்த போது 2022 ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பங்குபற்றுவதற்காக விசா கோரிக்கையை சமர்ப்பித்த போது, தனக்கு விசா வழங்க மறுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது மனைவி மற்றும் பிள்ளைகள் ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்தாலும், அமெரிக்காவில் உள்ள இந்த விசா தடையின் அடிப்படையில், ஆஸ்திரேலியா தனது நாட்டிற்குள் நுழைவதற்கான விசாவை இடைநிறுத்தியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழரின் அழிவும்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வது, இஸ்ரேலைப் போன்று பாலஸ்தீனமும் தனியான சுதந்திர நாடாக கருதப்படுமா என்பது தொடர்பிலும் தீர்வு காணப்பட வேண்டும். மேற்படி விடயங்கள் தொடர்பில் பேச்சுகள் தொடர்பில் நிரந்தர தீர்வு எட்டப்பட்டு விட்டால், அங்கு நிரந்தர சமாதானத்தினை எட்டுவதற்கான சாத்தியப்பர்டுகள் அதிகம் என்றே கருதப்படுகின்றது.

நானும் எமது மக்களுக்கான நீதியான உரிமைப் போராட்டத்தை வழிநடத்தியவன். அந்தப் போராட்டத்தில் நான் தமிழ் மக்களை மாத்திரம் நேசித்தவன் அல்லன். ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் மலையக மற்றும் இஸ்லாமிய மக்களை மாத்திரமன்றி சிங்கள மக்களையும் ஆழமாக நேசித்தவன். அதுபோல உலக அரங்கில் எங்கெல்லாம் விடியலுக்கான போராட்டங்கள் நடந்தனவோ, அங்கெல்லாம் உள்ள மக்களையும் நேசித்தவன்.

பாலஸ்தீனம் 1978 இல் எமக்கு ஆயுதப் பயிற்சி தந்தது. 1984ஆம் ஆண்டிலும் தோழர்களை அங்கு பயிற்சிக்கு அழைத்துச் சென்றிருந்தேன். அப்போது பாலஸ்தீன மக்களுடன் நான் பழகியிருக்கின்றேன். அவர்களின் ஆழமான உணர்வுகளையும் விரும்பங்களையும் உணர்ந்திருக்கின்றேன். எமது பயிற்சியின் போது அவர்களின் போராட்டங்களிலும் நான் களத்தில் நின்று பங்குபற்றியுள்ளேன். ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றேன்.

அங்கிருந்த பல்வேறு விடுதலை இயக்கங்களுடனும் பன்னாட்டு விடுதலை இயக்கங்களுடனும் பழகி இருக்கின்றேன். அவர்களது வழிமுறைகளையும் செயற்பாடுகளையும்அப்போது ஆராய்ந்து பார்த்திருக்கின்றேன். பாலஸ்தீன் போராட்ட முறைகளில் மாற்றம் ஒன்று தேவை என்பதை உணர்ந்து, அவர்களுடனும் பேசி இருக்கின்றேன்.

அதேபோன்று எமது விடுதலைப் போராட்ட முறைகளிலும் மாற்றம் தேவையென விரும்பியும் இருக்கின்றேன். பாலஸ்தீன போராட்ட அனுபங்களில் இருந்து நாம் பாடங்களை கற்க வேண்டும் என நான் அப்போதே கருதி இருக்கின்றேன். ஆனால் இன்று, எமது உரிமைப் போராட்ட அனுபவங்களும் அழிவு யுத்த முடிவுகளும் சகல மக்களுக்கும் பாடமாக அமைந்து விட்டது. சமாதான பேச்சுக்கான கதவுகளை இறுக மூடிவிட்டு ஆயுதங்களினால் எதையும் அடைந்துவிட முடியும் என்ற அதீத நம்பிக்கையின் விளைவுகளே அந்தப் படிப்பினைகள்.

போராட்டம் என்பது நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்துவது, பேச வேண்டிய இடத்தில் பேசுவது, அடைய வேண்டிய இலக்கை சாத்தியமான வழிகளில் அடைவதுமேயாகும். சமாதானத்துக்கான பேச்சு என்ற போர்வையில் அழிவை நோக்கிய வன்முறை ரீதியாக தம்மை பலப்படுத்தும் கபட நோக்கத்தையே நாம் கண்டிருக்கின்றோம்.

ஒரு கையில் ஒலிவ் மரக் கிளை, மறுகையில் ஆயுதம் இரண்டும் இருக்கின்றது. எது வேண்டும் என்பதை உலகம் தீர்மானிக்கட்டும் என்று யசீர் அரபாத் விடுத்த பகிரங்க அறிவிப்பை நான் அன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்.

சந்திரிகா அம்மையார் தழிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கான ஒரு அற்புதமான தீர்வை முன்வைத்திருந்தார். அப்போது அங்கிருந்து ஒரு கவிஞனின் குரல், “தந்தை வாங்கி தலை குனிந்து கொள்வதற்கு எங்களின் தலைவன் அரபாத் அல்ல” என்று உசுப்பேத்துகின்ற கவிதை வரிகளை வெளிப்படுத்தியிருந்தார்.

அதன்பின்னரான விளைவுகள் என்னவென்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். இன்று மாறி வந்திருக்கின்ற உலகத்தின் போக்கை உணர்ந்து பாலஸ்தீன மக்களின் பிரச்சினைகள் பேசித் தீர்க்கப்பட வேண்டும். அங்கு அமைதி நிலவ வேண்டும். மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம் என்ற நிலைமை பாலஸ்தீனத்தில் மாத்திரமல்ல உலகெங்கும் நிலவ வேண்டும்.

அழிவு யுத்த காலத்தில் எமது மக்கள் உணவின்றி, நீரின்றி, மின்சாரமின்றி, போக்குவரத்தின்றி, கல்வியின்றி பல அவலங்களை சுமந்து நின்ற வேளையில், அதன் வலிகளை நேரில் கண்டு அதற்கு கரம் நீட்டி, மக்களின் துயர் துடைத்தவர்கள் நாங்கள். இன்று காசாவிலும் இதுவே நடத்திருக்கின்றது. அங்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மனிதாபிமான உதவிகளை விரைந்து செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்துடன் எமது போராட்ட வழிமுறைகளை மாற்றிக் கொண்டவர்கள். எமது மக்களின் பயணத்தை எங்கிருந்து தொடங்குவது என்ற தீர்மானத்தை எடுத்திருந்தோம். 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அங்கிருந்து தொடங்குவது என்று வலியுத்தியிருந்தோம்.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி இலக்கை முன்வைத்து, தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்வது, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவும் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது என்ற மூன்று அம்ச நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, எமது அரசியல் பயணத்தை நெறிப்படுத்திக் கொண்டோம்.


அழிவு யுத்த காலத்தில் நாம் மனிதாபிமான பணிகளை மேற்கொண்டதையும் எமது அரசியல் நிலைப்பாட்டையும் எள்ளி நகையாடிய இதர தமிழ் இயக்க கட்சிகள், இன்று நீண்ட காலம் கடந்து எமது நிலைப்பாட்டுக்கே வந்திருக்கின்றன. இதனை நான் வரவேற்கிறேன். ஆனால், இதில் இந்த தமிழ்க் கட்சிகளது எண்ணங்களும், சிந்தனைகளும் உண்மைத் தன்மையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று, அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முன்வாருங்கள். மாறாக, நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம் என்று புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்கி அவற்றை கொதிநிலை பிரச்சினை ஆக்காதீர்கள். எந்தப் பிரச்சினைக்கும் கூச்சல் இடுவது தேர்தல் அரசியலேயன்றி தீர்விற்கான வழியல்ல.

அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்போது, ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு பிரச்சினைகளை தீராத பிரச்சினைகளாக்கி அதனையே தொடர்வதை விட்டு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதர தமிழ்க் கட்சிகள் முன்வர வேண்டும் என்பதே எனது நீண்டகால எதிர்பார்ப்பாக உள்ளது.

இன்றைய நிலையில் எமது ஜனாதிபதி மேன்மைதங்கிய ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துக்களும், செயற்பாடுகளும் எமது மக்களது பிரச்சினைகள் தொடர்பில் வெகு சாதகமாகவே முன்னிறுத்தப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சிகளும் கிட்டத்தட்ட அந்த நிலைப்பாட்டை ஏற்று வருகின்றன. இந்த வாய்ப்பை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எனது அபிலாஷை யாகும்” – என்றார்.

# பயங்கரவாதம் தொடர்பில் எச்சரிக்கை வேண்டும்; இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து



உலகமயமாக்கப்பட்ட பல்வேறு மோதல்களின் விளைவுகள் புவியியல் எல்லைகளுக்கு அப்பால் உடனடியாக பரவுகின்றன என்று வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா போர் ஓராண்டைக் கடந்தும் தொடர்ந்துவருகிறது. இந்த நிலையில், தற்போது ஹமாஸ் – இஸ்ரேல் போர் கிளம்பியிருக்கிறது.

காசாவில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த 7 ஆம்,திகதி இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை அடுத்து, அங்கு இருதரப்பு மோதல் அதிகரித்து வருகிறது. இஸ்ரேல் தரப்பில் 1,400 இறக்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

காசாவில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில், சமாதானம், அமைதி என இந்தியா நடுநிலைமையுடன் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் டில்லியில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில், உலகமயமாக்கப்பட்ட புவியில், பயங்கரவாதத்தின் தாக்கத்தை இனியும் பாதிக்கப்பட்ட ஒரே பகுதிக்குள் கட்டுப்படுத்த முடியும் என்ற எதிர்பார்ப்பு சாத்தியமற்றது என்று தோன்றுகிறது.

பூகோள அரசியல் எழுச்சி நிலைகளை நாம் காணும்போது, மத்திய கிழக்கில் என்ன நடக்கிறது, அதன் தாக்கம் என்ன வகையாக இருக்கும் என்பதை இன்னும் முழுமையாக உறுதிப்படுத்த முடியவில்லை.

உலகமயமாக்கப்பட்ட பல்வேறு மோதல்களின் விளைவுகள் புவியியல் எல்லைகளுக்கு அப்பால் உடனடியாக பரவுகின்றன, உதாரணமாக ரஷ்யா–உக்ரைன் போரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இங்கே பயங்கரவாதம் என்பது கருவியாக, ஆட்சிக்கலையாகப் பயன்படுத்தப்படுகிறது.

பயங்கரவாதம் என வரும்போது நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஏனென்றால், அதன் பரவும் தன்மை மிகுந்த தீவிரமுடையது. பயங்கரவாதத்தை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது.

அதனால் விளையும் எந்தவித ஆபத்தும் நமக்கு வெகு தூரத்தில் இல்லை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகியதால் ஸ்டாலினுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது: பழனிசாமி கருத்து

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகுகிறது என்று கூறிய பின்னர்தான், இஸ்லாமியர்கள் குறித்த நினைவே முதல்வர் ஸ்டாலினுக்கு வருகிறது.

பா.ஜ.கவிலிருந்து அ.தி.மு.க. விலகியது என்றவுடன், சிறுபான்மை மக்கள் அ.தி.மு.க. பக்கம் சாய்ந்துவிடுவார்கள் என்ற அச்சம் முதல்வருக்கு வந்துவிட்டது என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் சீலநாயக்கன் பட்டியில் இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அ.தி.மு.கவில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்றார். அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், கூட்டணி என்பது மாறுபடக்கூடியது. அது அவ்வப்போது தேர்தல் நேரத்தில் அமைப்பது. ஆனால், கொள்கை என்பது நிலையானது. அ.தி.மு.க. நிலையான கொள்கை கொண்ட கட்சி.

நான், பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. விலகுகிறது என்று கூறிய பிறகுதான், இஸ்லாமியர்கள் குறித்த நினைவே முதல்வர் ஸ்டாலினுக்கு வருகிறது. இஸ்லாமியர்களின் உணர்



வுகள் குறித்து நான் சட்டமன்றத்தில் பேசும்போது, இப்போதுதான், இஸ்லாமியர்கள் மீது பாசம் வந்துவிட்டதாக முதல்வர் பேசினார். இல்லை, நான் எப்போதுமே சாதிக்கும், மதத்துக்கும் அப்பாற்பட்டவன். அனைத்து மதத்தையும் நேசிக்கக்கூடியவன்.

எந்த சாதிக்கும் அ.தி.மு.க. அடிமை கிடையாது. எந்த மதத்துக்கும் அ.தி.மு.க. விரோதம் கிடையாது. அனைத்து சாதி, மதங்களையும் ஒரே பார்வையில்தான் பார்க்கும். அ.தி.மு.கவைப் பார்த்து அவ்வாறு கேட்பதற்கு காரணம், முதல்வர் ஸ்டாலினுக்கு பயம் வந்துவிட்டது. இதுவரை சிறுபான்மை மக்களுக்கு தி.மு.க. தான் அரணாக இருப்பது போன்ற ஒரு மாயத்தோற்றத்தை உருவாக்கி வந்தார்.

இதனால், பா.ஜ.கவிலிருந்து அ.தி.மு.க. விலகியது என்றவுடன், சிறுபான்மை மக்கள் அ.தி.மு.க. பக்கம் சாயந்துவிடுவார்கள் என்ற அச்சம் முதல்வருக்கு வந்துவிட்டது.

உண்மையிலேயே அந்த மக்களுக்கு நன்மை செய்திருந்தால், அந்த மக்கள் உங்களை நேசிப்பார்கள். நீங்கள் அவர்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்யவில்லை. ஒரு துரும்பைக்கூட கிள்ளிப்போடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# காசா மக்கள் வடக்கிலிருந்து வெளியேறுங்கள் இல்லாவிட்டால் தீவிரவாதிகளாகக் கருதுவோம்!

## - இஸ்ரேல் இராணுவம் அவசர எச்சரிக்கை



இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம் 16 ஆவது நாளை கடந்துள்ளது. இந்த நிலையில் காசா மக்களுக்கு புதிய எச்சரிக்கை ஒன்றை இஸ்ரேல் இராணுவம் விடுத்துள்ளது. காசாவாசிகள் வடக்கில் இருந்து வெளியேறாவிட்டால் அவர்கள் அனைவரையும் ஹமாஸ் ஆதரவு தீவிரவாதிகள் என்றே கருதுவோம் என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அறிவிப்புகளை இஸ்ரேலியப் படைகளின் பெயர் மற்றும் முத்திரையுடன் கூடிய துண்டுப் பிரசுரங்கள் மூலம் காசா மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

காசாவாசிகளின் கையடக்க தொலைபேசி எண்களுக்கும் குறுந்தகவல், காணொளி வாயிலாக இந்த தகவல்கள் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன.

அந்தக் குறுந் தகவலில், காசாவாசிகளுக்கு ஓர் அவசர எச்சரிக்கை. காசாவின் வடக்குப் பகுதியில் நீங்கள் இன்னும் இருப்பீர்களானால் அது உங்கள் உயிருக்கு ஆபத்தாகும். காசாவின் வடக்கில் இருந்து தெற்கு காசாவுக்கு செல்ல யாரெல்லாம் மறுக்கிறார்களோ அவர்கள் அனைவரும் தீவிரவாதிகளாகக் கருதப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரங்கள் பற்றி இஸ்ரேல் இராணுவம் விளக்க அறிக்கை வெளியிட்டுள்ளது. இது அப்பாவி பொது மக்கள் உயிரிழப்புகளைத் தடுப்பதற்கான முயற்சி என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. பொதுமக்களை தீவிரவாதிகளாகப் பாவிக்கும் உள்நோக்கம் இல்லை என்றும் இஸ்ரேல் இராணுவம் விளக்கியுள்ளது. இது வடக்கு காசாவிகள் தெற்கே செல்ல வேண்டும் என்பதற்கான வலியுறுத்தல் மட்டுமே என்றும் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்துவருகிறது. இந்த நிலையில், அமெரிக்கா தனது மிகவும் சக்திவாய்ந்த 'தாட்' எனப்படும் ஏவுகணை உள்ளிட்ட வான்வழித் தாக்குதல் தடுப்பு அமைப்பை அனுப்பிவைக்கிறது.

ஏற்கெனவே இஸ்ரேல் இராணுவ வீரர்களுடன் அமெரிக்க இராணுவத்தின் டெல்டா படையும் காசாவுக்குள் நுழையவுள்ளது என தகவல்கள் வெளியாகின.

இந்தச் சூழலில் தாட், பேட்ரியாட் போன்ற ஏவுகணைத் தடுப்பு அமைப்புக்களை அமெரிக்கா அனுப்புகிறது. பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஈரான், குவைத், லெபனான், சிரியா எனப் பல நாடுகள் செயல்படத் தொடங்கியுள்ள நிலையில் அமெரிக்க உதவிகள் இஸ்ரேலுக்கு நீண்டு கொண்டே இருக்கிறது.

இந்தச் சூழலில் வடக்கு காசாவில் மக்கள் இருந்தால் உயிரிழப்புகள் பல மடங்கு அதிகரிக்கும் என்பதால் இஸ்ரேல் இராணுவம் தொடர் எச்சரிக்கைகளை விடுத்துவருகிறது.

# உக்ரைனில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலி

உக்ரைனின் – கிரின்கி பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்ட உக்ரைன் இராணுவ சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

ரஷ்ய இராணுவ செய்தித் தொடர்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், உக்ரைனின் சில இடங்களை கைப்பற்றுவதற்காக தமது இராணுவம் முனைப்புடன் செய லாற்றுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தாக்குதலால் குடியிருப்புக்கள் பலவற்றிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், உக்ரைனுக்கு சொந்தமான குபியன்ஸ்க், லைமன் உள்ளிட்ட பகுதிகளில் தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவிடம் கவிழ்ந்தது நியூஸிலாந்து






| | உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
| 01 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 02 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 03 | தென்னாபிரிக்கா | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 2.212 |
| 04 | அவுஸ்திரேலியா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.193 |
| 05 | பாகிஸ்தான் | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | -0.456 |
| 06 | பங்களாதேஷ் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.784 |
| 07 | நெதர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.790 |
| 08 | இலங்கை | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.048 |
| 09 | இங்கிலாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.248 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.250 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி

நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் அசத்தல் வெற்றிபெற்ற இந்திய அணி, நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் எந்தவொரு தோல்வியையும் அடையாத அணியாக வெற்றிநடைபோடுகின்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் இந்திய – நியூஸிலாந்து அணிகள் மோதின.

இதில் முதலில் நியூஸிலாந்து அணி துடுப்பெடுத்தாடியது.

அதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு, ரஷின் ரவிந்திர 75 ஓட்டங்களையும், டரில் மிச்செல் 130 ஓட்டங்களையும் சேர்த்துக்கொடுக்க, 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 273 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், மொஹமட் ஷமி 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார். எஞ்சிய விக்கெட்டுகளில் குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும் பும்ரா, சிராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 274 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இந்திய அணி, ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடியது.

அணித்தலைவர் ரோஹித் ஷர்மா (46), சுப்மன் ஹில் (26), ஷெயாஸ் ஐயர் (33), ராகுல் (27), விராட் கோஹ்லி (95) ஆகியோரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, 48 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களைச் சேர்த்து 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

ஜடேயா 39 ஓட்டங்களுடனும் மொஹமட் ஷமி ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக இந்தியாவின் மொஹமட் ஷமி தெரிவானார்.

நேற்றைய போட்டிவரை நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் எந்தவொரு தோல்வியையும் சந்தித்திருக்காத அணிகளாக இந்தியா, நியூஸிலாந்து அணிகள் இருந்தன. ஆனால், நேற்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி அந்த இடத்தைத் தவறவிட, இந்திய அணி மாத்திரமே தொடர் வெற்றிகளுடன் தொடர்கின்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பாகிஸ்தான் – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

# தேசிய மட்ட கபடிப் போட்டியில் சம்பியனானது அம்பாறை அணி



**(அ.அஸ்வர்)**

34 ஆவது தேசிய இளைஞர் விழாவை யொட்டி நடத்தப்பட்ட தேசிய மட்ட கபடிப் போட்டியில் அம்பாறை மாவட்ட அணி சம்பியனானது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் மகரகம இளைஞர் நிலைய உள்ளக விளையாட்டு அரங்கில் இப்போட்டி இடம்பெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கேகாலை மாவட்ட அணியை எதிர்த்தாடிய அம் பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய நிந்தவூர் மதீனா இளைஞர் கழக அணி 58: 13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்தது.

இப்போட்டியில் அம்பாறை மாவட்ட அணிக்கு தலைமை தாங்கிய அஸ்லம் சஜா சிறந்த வீரராகத் தெரிவு செய்யப் பட்டார்.

# பெண்கள் கபடியில் யாழ்ப்பாணம் அசத்தல்

**(அ.அஸ்வர்)**

34 ஆவது தேசிய இளைஞர் விளை யாட்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட மக ளிருக்கான தேசிய மட்ட கபடிப் போட்டி யில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணி சம்பியனானது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் மகரகம இளைஞர் மத்திய நிலைய உள்ளக விளையாட்டு அரங்கில் இப் போட்டி இடம்பெற்றது.



இந்த் இறுதிப் போட்டியில் குருநாகல் மாவட்ட மகளிர் அணியை எதிர்த்தாடிய யாழ். மாவட்ட மகளிர் அணி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்ட னர்.



# சாய்ந்தமருதில் சிறுவர் கிரிக்கெட்

**- அஸ்ஹர் ஆதம் -**

வறுமை ஒழிப்பு வாரம் மற்றும் சர்வேதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமூர்த்தி வங்கிச் சங்கத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் கிரிக்கெட் தொடர் ஒன்று நடைபெற்றது.

இது, அந்த பிரதேச சமுர்த்தி சிறு வர் கழகங்களுக்கிடையில் நேற்றுமுன் தினம் (21) சாய்ந்தமருது பொது விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இச்சுற்றுப்போட்டியை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் ஆரம்பித்து வைத்தார்.

இதில் பிரதேச செயலக சமுர்த்தி தலை மைப்பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ.நஜீம், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமூக அபிவிருக்கி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எம். சபுறுதீன், இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஸமீலுல் இலாஹி, சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்களான ஏ.எம் காலிதீன், எம்.ஐ.அன்சார், ஏ.எம்.அபுல் ஹுதா, ஓய்வுபெற்ற சமுர்த்தி அபிவி ருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ.கபூர், அபிவி ருத்தி உத்தியோகத்தர்களான ஆர்.எம். இம்தாத், ஏ.ஜே.எம். இம்தாத், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எல்.எம். றிசாட் உள் ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விளையாட்டுச் செயலிகள் ஊடாக அதிக பணமோசடிச் சம்பவங்கள்

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எச்சரிக்கை



விளையாட்டுச் செயலிகள் (apps) ஊடாக பணமோசடிகள் நடக்கின்றன என்றும், இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜெகத் விஷாந்த தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் இவ்வாறான பண மோசடிகளில் சிக்கிக் கொண்ட பலர் உள்ளனர். குறிப்பிட்ட விளையாட்டுச் செயலிகளில் இணைந்து கொள்வோர் அங்கு ஒரு சிலரைக் கொண்ட குழுவாக் கப்படுகின்றனர். அதில் இணையும் போது ஒரு சிறு தொகைப் பணம் அவர்களின் கணக்குக்கு வழங்கப்பட்டுச் சேர்க்கப்படுகின்றனர். அந்த குழுவில் அதிகளவானோர் இருப்பதாகவும் அது காட்டும்.

அதன்பின்னர் விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் ஒரு தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டும். அதில் சிறு தொகை உடனடியாகவே மீளவும் விளையோடுவோரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

தொடக்கத்திலே விளையாடுபவர் முதலில் வெற்றிபெறுவார்.

அதனால் ஏற்படும் நம்பிக்கையால் மீண்டும் மீண்டும் பணம் செலுத்தி விளையாடத் தூண்டப்படுகின்றனர். விளையாட்டின் ஒவ்வொரு படிநிலையின்போதும் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்துச் செல்லும். இது லட்சங்களை எட்டும்போதும் கணக்கில் சிறியளவு தொகை வரவு வைக்கப்படும். உதாரணமாக 40 லட்சம் ரூபா ஒருவர் செலுத்தினால் அவரது கணக்கில் சில லட்சங்கள் உடனடியாக வரவு வைக்கப்படும்.

விளையாட்டில் வெற்றிபெற்றால் வெற்றித் தொகையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படும். பெருந்தொகையை வைப்பிலிடும் சந்தர்ப்பங்களில் விளையாட்டுப் படிமுறைகளை நிறைவேற்றவில்லை என்று கூறி ஒரு கட்டத்தில் அந்த விளையாட்டுக் குழுவில் இருந்து நீக்கப்படுகின்றனர். இதை நம்பிப் பெருந்தொகையான பணத்தைச் செலுத்தும் பலர் பணத்தை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக எவர் மீதும் குற்றச்சாட்டுப் பதிவு செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. அந்தக் குழுவில் உள்ளவர்களிடையே பணம் பரிமாற்றப்பட்டு, ஒரு சங்கிலித் தொடராக இது மேற்கொள்ளப்படுவதால் இறுதியில் பணத்தைப் பெற்றுக்கொள்வது யார் என்பதைக் கண்டுபிடிப்பதும் கடினமானது. ஆகையால் இவ்வாறான விளையாட்டுச் செயலிகள் மூலம் நடக்கும் பண மோசடி தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது.

இந்தப் பண மோசடியில் சிக்கிய பலர் உள்ளபோதும் அவர்களால் முறைப்பாடு செய்ய முடிவதில்லை. யாருக்கு எதிராக முறைப்பாடு செய்வது என்ற சிக்கலாலேயே பலர் இது தொடர்பில் மௌனமாக இருக்கின்றனர். பல்வேறு தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்தலின் பின்னணியில் இவ்வாறான மோசடிகளும் உள்ளன. இவ்வாறான செயலிகளை மக்கள் உபயோகப்படுத்தாது தவிர்த்தலே புத்திசாலித்தமானது. - என்றும் தெரிவித்தார்.



# உர விநியோகத்திற்கு பொறுப்பான உயரதிகாரிகள் இருவர் இடமாற்றம்

விவசாய அமைச்சில் உர விநியோகத்திற்கு பொறுப்பாகவிருந்த உயரதிகாரிகள் இருவரை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

பெரும்போகத்தில், விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி 3 மாதங்கள் கடந்தும் இதுவரை விலை மனு கோருவதற்கு நடவடிக்கை எடுக்காமையே இதற்கான காரணமாகும்.

பல நாடுகளுக்கிடையே நிலவும் மோதல்கள் காரணமாக உலக சந்தையில் யூரியா உள்ளிட்ட அனைத்து உரங்களின் விலையும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்த மே மாதத்தில் உரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், யூரியா உரத்தை மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்திருக்க முடியும் என விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த காலகட்டத்தில், ஒரு மெட்ரிக் தொன் யூரியாவை 350 டொலருக்கு கொள்வனவு செய்திருக்கலாம்.

எனினும், தற்போது ஒரு மெட்ரிக் தொன் யூரியா 650 டொலர் வரை அதிகரித்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு பாரிய நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என விவசாய அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் போகத்தில் உரத்தின் விலை அதிகரிக்கும் சாத்தியமுள்ளது என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சீன உர விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால், உரத்தின் விலை அதிகரிக்கும் சாத்தியமுள்ளது என விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க கூறியுள்ளார்.

இம்முறை போகத்திற்கு தேவையான யூரியா உரம், போதுமானளவு கையிருப்பில் உள்ளது என அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதியின் பின்னர் யூரியா உரம் நாட்டிற்கு கிடைக்கும் எனவும் விவசாய அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.



# புத்தளம் நீலபொம்ப கிராமத்தில் கொம்பன் யானை ஒன்று மரணம்

-ரஸீன் ரஸ்மின்-

புத்தளம், சாலியவெவ பிரதேச செயலகத்திற்கட்பட்ட நீலபொம்ப கிராமத்தின் வீடு ஒன்றுக்கு அருகாமையில் உள்ள தனியார் காணியொன்றில் யானையொன்று நேற்றுக் காலை உயிரிழந்துள்ளது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க கொம்பன் யானை ஒன்றே உயிரிழந்துள்ளதாக கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள கொம்பன் யானையின் உயரம் சுமார் 8 முதல் 9 அடி எனவும் யானையின் கொம்பு சுமார் இரண்டு அடி நீளம் எனவும் கருலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

யானை மீதான உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரேதன் மரணத்திற்கான சரியான காரணத்தை அறிய முடியும் எனவும் கருலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் கூறினர். பிரேத பரிசோதனை வடமேல் மாகாண வனஜீவராசித் திணைக்கள கால்நடை வைத்தியர் இசுரு ஹேவா கொட்டுகேவினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கொம்பன் யானை எவ்வாறு உயிரிழந்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை கருவலகஸ்வெவ வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகளுடன் சாலியவெவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த கொம்பன் யானையைப் பார்வையிடுவதற்காக சாலியவெவ பிரதேச செயலகத்திற்கட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வருகை தந்திருந்தனர்.

புத்தளம் மாவட்டத்தில் காட்டுயானைகள் வீடுகள், பாடசாலைகள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்கள் மற்றும் உடைமைகள், கட்டடங்களை நாசம் செய்து வருகின்றமையுடன், மனித உயிர்களுக்கும் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தி வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முறையானமின்வேலிகள்அமைக்கப்படாமையே இவ்வாறு காட்டு யானைகள் மக்கள் குடிமனைகளுக்குள் உள்நுழைய காரணமாக அமைகிறது என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான யானைக்கு ஆயுர்வேத சிகிச்சை

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கான மகரகம சீதா யானைக்கு ஆயுர்வேத சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீதா யானை மகரகம பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளது என ஶ்ரீதலதா மாளிகையின் கால்நடை வைத்திய பிரிவின் வைத்தியர் தரிந்து விஜேகோன் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் போது யானையின் நெஞ்சு பகுதியிலிருந்து அகற்றப்பட்ட இரும்பு உருண்டை அரச இரசாயன பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மஹியங்கனை ரஜமஹா விகாரையில் இடம்பெற்ற பெரஹரா ஊர்வலத்தில் 47 வயதான சீதா யானை பங்கேற்ற பின்னர் விஹாரையின் மைதானத்தில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த போது கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி அதன் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. வன விலங்கு அதிகாரி ஒருவரால் யானை மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!



நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தற்போது டெங்கு தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 66 ஆயிரத்து 476 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தின் பல பகுதிகளிலும் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

# நாட்டில் தொழுநோயாளர்களை அடையாளம் காண நடவடிக்கை

நாட்டில், தொழு நோயாளர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என தேசிய தொழு நோய் தடுப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய தொழு நோய் தடுப்பு இயக்கத்தின் பணிப்பாளர் விஷேட வைத்தியர் பிரசாத் ரணவீர இதனை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், ஹெந்தலையிலுள்ள தேசிய தொழு நோய் தடுப்பு வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.



# போர்க்கால ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு




முல்லைத்தீவு ஊடக அமையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் போர்க்கால ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முல்லைத்தீவு – மணற்குடியிருப்பில் நடைபெற்றது. ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரகுராமும், சிறப்பு விருந்தினர்களாக ஊடக விரிவுரையாளர் அமிர்தநாயகம் நிக்ஸன், சட்டத்தரணி வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.10.2023




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகை கள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக் கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோ ருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள் ளுங்கள். இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவை யற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியா ளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவை யற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவ லையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம் படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமை களை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர் கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக் கியம் மேம்படும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது. இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பரா மரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்த மாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பி- க்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடின மாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். சூழ்நிலையை கையாள் வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராம ரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க லாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன் கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரி களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப் பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட் புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.10.2023




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள்.உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

